33 | T | I

**க.பொ.த உயர்தர 2020 மாணவர்களுக்கான**
**5ம் தவணைக்கான கணக்கீட்டுப்பாட முன்னோடிப் மாதிரி வினா**
**யா/ வயாவிளான் மத்திய கல்லூரி – வயாவிளான்**

BY- VS. THIRUKUMARAN B.COM (ACC) SPC. PGDE

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2020 மார்ச்
General Certificate of Education (Adv.Level) Examination, march 2020

# Accounting I
# கணக்கீடு I

A/L 2020
தரம் 13

**09.03.2020**

2.00
மணி

பகுதி I

Q 1) பொது நோக்குடைய நிதிக்கூற்று தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது மிக சரியானது.

A இது அக்கறையுடைய தரப்பினருக்கு தீர்மானம் எடுக்க தேவையான தகவல் வழங்குகின்றது.
B இது வரலாற்றுத்தகவல்களையும் எதிர்வுகூறப்படும் தகவல்களையும் அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படுகின்றது.
C இது கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுகின்றது.
D இது அமைப்புரீதியான திட்டமிடல் கட்டுப்படுத்தல் நோக்கங்களுக்கு உதவுகின்றது.

1) ABC 2) ABD 3) ACD 4) AC 5) ABCD

➢ குகன் நிறுவனத்தின் 2020 ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்கான தகவல்கள் வருமாறு

1.1.2020 இல் சொத்து ரூ 400000 ரூ பொறுப்பு 250000 காணப்பட்டது
8.1.2020 ரூ 15000 பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
15.1.2020 ரூ 8000 பண்டங்கள் ரூ 15000 கடனுக்கு விற்கப்பட்டது. ( வியாபாரக் கழிவு 20%)
25.1.2020 ரூ கடன்பட்டோரிடமிருந்து 1000 கழிவுதள்ளி ரூ 9000 பெறப்பட்டது.
29.1.2020 கடனபட்டோனால் திருப்பியது ரூ 5000 இதன்கிரயம் ரூ 4000
02.02.2020 கடன்கொடுநருக்கு ரூ 2000 கழிவுதள்ளி ரூ 8000 செலுத்தப்பட்டது.
05.02.2020 பற்றிய காசு 4000

**மேற்படி தரவுகளை அடிப்படையாககொண்டு 2ம், 3ம், 4ம் வினாக்களுக்கு விடை தருக**

Q 2) 31.1.2020 இல் இறுதிக் கணக்கீட்டுச் சமன்பாடு யாது ?

| | சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | 417000 | 152000 | 265000 |
| 2. | 405000 | 150000 | 255000 |
| 3. | 415000 | 155000 | 260000 |
| 4. | 415000 | 150000 | 265000 |
| 5. | 410000 | 150000 | 260000 |

Q 3) ஜனவரி மாத லாபமும், 05.02.2020 இல் உரிமையாண்மை யாது?

1) ரூ 2000, ரூ 156000 2) ரூ 4000, ரூ 155000 3) ரூ 2000, ரூ 152000
4) ரூ 3000, ரூ 150000 5) ரூ 2000 ரூ 150000

Q4) நிறுவனம் ஒன்றில் இடம்பெறும் கணக்கீட்டு செய்முறைகள் வருமாறு

A – வருமானக்கூற்று
B – வெளித்திரும்பல் நாளேடு
C – வரவுத்தாள்
D – வெளித்திரும்பல்
E – பரீட்சைமீதி

சரியான ஒழுங்கில் வரிசைப்படுத்துக. (..........)

1) CDBEA 2) DBCEA 3) CEADB 4) DCBEA 5) CBDEA

Q5) கபிலன் நிறுவனம் அபிசன் நிறுவனத்திற்கு ரூ 20000 இற்கு கடனுக்குவிற்கப்பட்ட பண்டங்கள் ரூ 5000 பண்டங்கள் பழுதுகாரனதாக அபிசன் கபிலனுக்கு திருப்பப்பட்டதுடன் மிகுதிக்கு காசோலை பெறப்பட்டது. இதனை அபிசன் நிறுவனத்தில் பிரதிபலிக்கும் மூலஆவணங்களின் தொடர் எது.

1. பற்றுச்சீட்டு வரவுத்தாள் காசோலைஅடியிதழ்
2. பற்றுச்சீட்டு செலவுத்தாள் காசோலைஅடியிதழ்
3. பட்டியல் செலவுத்தாள் பற்றுச்சீட்டு
4. விற்பனைபட்டியல் வரவுத்தாள் காசோலைஅடியிதழ்
5. பட்டியல் வரவுத்தாள் சைச்சாத்து

➢ வரையறுத்த திலக் கம்பனியின் கடன்பட்டோர் பட்டியல் மீதி ரூ 64000 கட்டுப்பாட்டுக் கணக்கு உடன்படவில்லை காரணங்கள் வருமாறு.

- கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவுப் பக்கம் ரூ 1000 மிகையாக கூட்டப்பட்டது.
- எதிர்மாற்றல் ரூ 4000 கடன்பட்டோர் பேரேட்டில் ரூ 400 என பதியப்பட்டது.
- விற்பனைத் திரும்பல் 5000 விற்பனைத்திரும்பல் நாளேட்டில் ரூ 500 என பதியப்பட்டது.
- கடன்பட்டோர்பேரேட்டில் காணப்பட்ட செலவுமீதி ரூ 2000 பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை.

**மேற்படி தரவுகளை அடிப்படையாககொண்டு 6ம், 7ம், வினாக்களுக்கு விடை தருக**

Q6) திருத்தப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?

1) ரூ 50900 2) ரூ 46400 3) ரூ 49900 4) ரூ 58400 5) 53900

Q7) திருத்தமுன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு யாது?

1) ரூ 57400 2) ரூ 52900 3) ரூ 47400 4) ரூ 58400 5) 51900

Q8) வணிகத்தில் அக்கறையுடைய தரப்பாக பின்வருவோர் காணப்படுகின்றனர் (......)

A உரிமையாளர்
B முகாமையாளர்
C வழங்குநர்
D ஊழியர்

இவர்கள் பின்வரும் நோக்கங்களுக்காக அக்கறைபடுகின்றனர்

1. தொழில் பாதுகாப்பும் உறுதிப்பாடும்
2. முதலுக்கான பாதுகாப்பு
3. பொருட்களுக்கான சந்தைவாய்ப்பு

4. வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தி வணிக நோக்கத்தை அடைதல்

மேற்குறிப்பிட் நோக்கங்களை அடையும் தரப்பினரை வரிசைப்படுத்துக

1) BCAD 2) CDAB 3) DACB 4) DBAC 5) DCAB

Q9) பின்வரும் கூற்றுக்களில் **பிழையான** கூற்றை தெரிவு செய்க.

A விற்பனை மீதான VAT ஒரு சென்மதி ஆகும்.
B பொறிக்கடன்கொடுநர் கணக்கு கடன்கொடுடுநர் பேரேட்டில் பேனப்படும்
C விற்பனைத்திரும்பல் விற்பனைக்கணக்கில் வரவிடப்படின் இப் பிழையால் மொத்தலாபம் குறையும்
D கொள்வனவு மிதான VAT ஒரு செலவினமாகும்

1) BC 2) ABCD 3) AB மட்டும் 4) D மட்டும் 5) BCD

❖ 1.1.2020 இல் ஆரம்பித்த மதன் கம்பனியின் ஜனவரி மாதத்திற்கான காசுப் பெறுவனவு நாளேடின் மொத்தம் ரூ 162000 காசுக்கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் ரூ 112000 ஜனவரி மாத வங்கிக்கூறில் காணப்பட்ட நேரடிவைப்பு ரூ 8000 வங்கிக்கட்டனம் ரூ 2000 நிலையியற்கட்டளை கொடுப்பனவு ரூ 3000 என்பன பெறுவனவு கொடுப்பனவு நாளேடுகளில் பாதியப்படவில்லை. 31.1 இல் காணப்படும் மாற்றப்படாத காசோலை ரூ 12000 வசூழிக்கப்படாத காசோலை ரூ 5000 ஆகவுள்ளது.

### 10ம் 11ம் வினாக்களுக்கு விடை தருக

Q10) 31.1.2020 இல் காணப்படும் வங்கிக்கூற்றுப்படி மீதி யாது?
1) ரூ 50000 2) 60000 3) 40000 4) 30000 5) 80000

Q11) மேற்படி தகவல்களின்படி பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானது?

A ஜனவரி மாத மொத்த காசுப் பெறுவனவு ரூ 170000
B ஜனவரி மாத மொத்த காசுக்கொடுப்பனவு ரூ 117000
C ஜனவரி மாத வங்கிக் கூற்றின் மொத்த கழிப்பனவுகள் ரூ 105000
D ஜனவரி மாத வங்கிக் கூற்றின் மொத்த சேர்ப்பனவுகள் ரூ 165000

1. AB 2. AC 3. ABCD 4. BCD 5. ஏல்லாம் பிழையானது

Q12) சாள்ஸ் என்பவர் 1.1.2020 இல் மூலதனமாக 500000 முதலீடு செய்து வியாபாரமொன்றை ஆரம்பித்தார் இவர் இத்தொகையில் 80% பொருட்களை கொள்வனவு செய்ய செலவிட்டார். இப் பொருட்கள் முழுவதும் கிரயத்தில் 40% கூட்டி விற்பனை செய்தார் இவ் வியாபாரத்தின் 31.1.2020 இல் தேறியசொத்து ரூ 620000 ஆகும் இம் மாதத்திற்கான பற்றுக்கள் மேலதிக மூலதனம் முறையே ரூ 8000, ரூ 15000 ஆகும். 31.1.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான தேறியலாபம் , செயற்பட்டுச் செலவினம்.

| | இலாபம் | செயற்பாட்டுச் செலவு |
|---|---|---|
| 1) | 113000 | 54000 |
| 2) | 127000 | 33000 |
| 3) | 113000 | 47000 |
| 4) | 207000 | 47000 |
| 5) | 113000 | 57000 |

Q13) காசுக்கட்டுப்பாட்டு மீதியை விட வங்கிக்கூற்று மீதி அதிகமாக காணப்பட்டது இதற்கு வகை செய்யும் சரியான நிகழ்வுகள் எவை?

A வங்கி அறவீடுகள்
B மாற்றப்படத காசோலை
C வசூழிக்கப்படாத காசோலை
D நேரடிவைப்பு

2) AC 2) BC 3) Aமட்டும் 4) C மட்டும் 5) BD

♣ யமுனா பொதுக்கம்பனியன் நிறுவனத்தின் 2019 மாரச் மாதத்தில் இடம்பெற்ற பிழைகள் வருமாறு

A – விற்பனை ரூ 5000 விற்பனை திரும்பல் நாளேட்டில் பதியப்பட்டது.
B – காசு விற்பனை ரூ 4000 கடன்பட்டோரிடம் பெற்ற காசாக கருதி பதிவிடப்பட்டது.
C – 1.3 இல் இடம்பெற்ற அலுவலக உபகரணகொள்வனவு ரூ 10000 அலுவலகச் செலவுக் கணக்கில் ரூ 1000 எனபதியப்பட்டது. அலுவலக உபகரணத்திற்கு 12% தேய்விடப்பட்டது.

**14ம் 15ம் வினாக்களுக்கு விடை தருக**

Q14) மேற்படி பிழையால் தொங்கல் கணக்கு மீதியும் மார்ச் இலாபத்தில் ஏற்பட்ட தாக்கமும் யாது?

| | தொங்கல்கணக்கு | இலாபம் |
|---|---|---|
| 1) | 2000 வரவு | ரூ 10000 குறையும் |
| 2) | 1000 செலவு | ரூ 15000 அதிகரிக்கும் |
| 3) | 3000 வரவு | ரூ 14000 குறையும் |
| 4) | 9000 செலவு | ரூ 14900 அதிகரிக்கும் |
| 5) | 9000 வரவு | ரூ 14900 குறையும் |

Q15) மேற்படி பிழையை திருத்துவதால் கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு மீதியில் ஏற்படும் தாக்கம் யாது?

கட்டுபாட்டுகணக்கு

1) 14000 குறையும்
2) 14000 அதிகரிக்கும்
3) 24000 குறையும்
4) 30000 அதிகரிக்கும்
5) 18000 அதிகரிக்கும்

♣ வரையறுத்த சங்கர் கம்பனி Vat பதிவு செய்யப்பட்ட கம்பனி 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு

பொறிக்கொள்வனவு ரூ 500000
பொறிக்கான தீர்வை ரூ 30000
பெறுமதிசேர்வரி ரூ 20000
வியாபாரக்கழிவு ரூ 10000
பொறிபழுதுபார்தல் செலவு ரூ 5000
பொறி நிறுவுதற்கட்டனம் ரூ 20000
பரீட்சார்த்த உற்பத்திக்கட்டனம் ரூ 45000

பரிட்சாார்த்த உற்பத்தி 100 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ 50 இற்கு விற்கப்பட்டது இப்பொறியின் இழிவுப்பெறுமதி ரூ 20000 பயனுள்ள ஆயுட்காலம் 20 வருடம். 1.4..2018 இருந்து பொறி பயன்பாட்டிற்கு வருகின்றது.

**16 ம் 17ம் வினாக்களுக்கு விடை தருக.**

Q16) பொறியின் மூலதனக்கிரயமாக இனம்கானவேண்டிய தொகை யாது?

1) ரூ 595000 2) 590000 3) 590000 4) 480000 5) 580000

Q17) 31.3.2019 இல் பொறியின் முன்கொண்டுவரும் தொகை யாது?

1) ரூ 537000 2) 552000 3) 532000 4) 562000 5) 542500

♣ 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சாம் உற்பத்திக் கம்பனியின் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட குறைவு 14000
நேர்கூலி ரூ 18000
மொத்த மேந்தலை ரூ 30000
முடிவுப்பொருள் இருப்பு அதிகரிப்பு ரூ 20000
காலக்கிரயம் ரூ 12000
விற்பனை ரூ 240000
மொத்தலாபம் ரூ 80000
.

18, 19 ம் வினாக்களுக்கு விடை தருக

Q18) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்த உற்பத்தி கிரயம் யாது?

1) ரூ 200000 2) ரூ 240000 3) ரூ 220000 4) ரூ 180000 5) ரூ 160000

Q19) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மூலப்பொருள்கொள்வனவு ?

1) ரூ 120000 2) ரூ 140000 3) ரூ 180000 4) ரூ 150000 5) ரூ 130000

Q20) சாதனைகள் விளையாட்டுக் கழகத்தில் வருடாந்தம் அங்கத்தவர் ஒருவர் ரூபா 200 சந்தாக்கட்டனமாக செலுத்தும் 100 அங்கத்தினர் காணப்படுகின்றனர் .

*1/4/2018* இல் மீதிகள்
சந்தா நிலுவை ரூபா 2000 முற்பன சந்தா ரூபா 1000
நிதியாண்டில் 80 அங்கத்தவர் நடப்பாண்டில் சந்தாவை செலுத்தினர் இவர்களில் 5 அங்கத்தவர் இவ்வாண்டுச் சந்தாவுடன் மேலதிகமாக சென்ற வருட சந்தாவையும், இவர்களில் 10 அங்கத்தவர்கள் இவ்வாண்டுச் சந்தாவுடன் மேதிகமாக அடுத்த வருட சந்தாவையும், செலுத்தியிருந்தனர்.

31.3.2019 ஆம் ஆண்டின் இறுதியில் வருமதி சந்தா யாது?

1) ரூ 7000 2) ரூ 5000 3) ரூ 3000 4) ரூ 5000 5) ரூ 4000

Q21) பங்குடமை தொடர் பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றை தெரிவு செய்க

A – பங்குடைமைக்கு ஒப்பந்தம் ஒன்றிருத்தல் கட்டாயமானது.
B – பங்காளர் ஒருவர் வருட ஆரம்பத்தில் அல்லது இறுதியில் மட்டுமே விலகமுடியும்
C - பங்காளரது மூலதன மீதிகளுக்கு வழங்கப்படவேண்டிய வட்டி பங்குடைமையின் உரிமையை குறைக்கும்
D – இளைப்பாறும் பங்காளனுக் செலுத்தவேண்டிய கடனுக்குரிய வட்டி பங்குடமையின் உரிமையை குறைக்கும்.

1) BCD 2) AC 3) ACD 4) BC 5) ABCD

♣ இலாபநட்டங்களை 2:1:1 என பகிரும் பங்குடமையில் X, Y, Z என்போர் பங்காளர்களாவார். 1.4.2018 இல் பங்காளர் மூலதன மீதிகள் மொத்த உரிமை வருமாறு

| | மொத்த உரிமை | நடைமுறைக்கணக்கு |
|---|---|---|
| X | 280000 | 20000 |
| Y | 140000 | (10000) |
| Z | 120000 | 20000 |

1.4.2018 இல் Y இளைப்பாறினார் Y க்கு செலுத்தவேண்டிய மொத்த தொகை ரூ160000 ஓம் Y ம் Z இலாபநட்டங்களை சமனாக பகிர தீர்மானித்தனர். நிறுவன நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக்கணக்கில் மேற்கொள்ளப்பட்டது. புதிய உடன்படிக்கைக்கு அமைய பங்காளர் மூலதனமீதிக்கு ஆண்டுக்கு 10% வட்டிக்கும் X க்கு ஆண்டுச் சம்பளமாக ரூ 30000 ம் வழங்கப்பட வேண்டும். பங்காளர்

பற்றுக்கள் X. Z முறையே ரூ 12000, ரூ 10000 31.3.2019 X . Z நடைமுறைக் கணக்கு மீதிகள் முறையே ரூ 84000, ரூ 38000

**22ம் 23ம் 24ம் வினாக்களுக்கு விடை தருக.**

Q22) பங்குடைமையின் மொத்த நன்மதிப்பு தொகை யாது?

1) ரூ 100000 2) ரூ 80000 3) ரூ 20000 4) ரூ 50000 5) ரூ 40000

Q23) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்குடைமையின் பகிரக்கூடிய இலாபம் யாது?

1) ரூ 104000 2) ரூ 120000 3) ரூ 106000 4) ரூ 40000 5) ரூ 132000

Q24) X இனதும், Z இனதும் மொத்த இலாபப் பங்கு யாது?

| | X | Z |
|---|---|---|
| 1. | 20000 | 20000 |
| 2. | 76000 | 20000 |
| 3. | 76000 | 28000 |
| 4. | 46000 | 28000 |
| 5. | 46000 | 20000 |

❖ வரையறுத் பாலாஜி கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

| விபரம் | ரூ 000 |
|---|---|
| விற்பனை | 6800 |
| விற்பனைக்கிரயம் | 4400 |
| நிர்வாகச்செலவு | 800 |
| மோட்டார்விற்பனைலாபம் | 200 |
| செலுத்திய பங்குலாபம் | 100 |
| காணிமீள்மதிப்பீட்டு மிகை | 500 |
| பொறிமதிப்பீட்டு பற்றாக்குறை | 300 |

31.3.2015 இல் பொறியானது ரூ 200000 ஆல் கூட்டி மீளமதிப்பிடப்பட்டிருந்தது. காணி 31.3.2019 இல் முதல்தடவையாக கூட்டி மீளமதிப்பிடப்பிடப்பட்டது.

**25ம் 26ம், 27ம்** வினாக்களுக்கு விடை தருக.

**Q25**) இலங்கை கணக்கீட்டு நியமத்தினபடி 31.3.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்தவருமானம், மொத்தச்செலவு எவை?

| | மொத்தவருமானம் 000 | மொத்தச்செலவு 000 |
|---|---|---|
| 1) | 7800 | 5400 |
| 2) | 7300 | 5500 |
| 3) | 7800 | 5600 |
| 4) | 7500 | 5500 |
| 5) | 8100 | 5500 |

**Q26**) **LKAS 1** இன்படி 31.3.2019 இல் முடிவடைந்த காலத்திற்கான இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் யாது?

| | இலாபம் | ஏனையமுற்றுமடங்கிய வருமானம் |
|---|---|---|
| 1) | 1700 | 200 |
| 2) | 1800 | 200 |
| 3) | 2700 | 500 |
| 4) | 1600 | 300 |
| 5) | 1700 | 300 |

**Q27)** **LKAS 1** இன்படி 31.3.2019 இல் முடிவடைந்த காலத்திற்கான மொத்தமுற்றுமடங்கிய வருமானம், மற்றும் நிறுத்திவைத்தலாபம் யாது?

| | மொத்தமுற்றுமடங்கிய வருமானம் | நிறுத்திவைத்தலாபம் |
|---|---|---|
| 1) | 2500 | 2000 |
| 2) | 2200 | 1400 |
| 3) | 2000 | 1600 |
| 4) | 2000 | 1800 |
| 5) | 2500 | 1500 |

Q28) வரையறுத்த வைமன் கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| காலத்திற்கான இலாபம் | ரூ 172000 |
| 18/19ம் நிதியாண்டுக்கானவரி | 48000 |
| ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு | 8000 |
| நிதியாண்டுக்குரிய வட்டி | 6000 |
| இருப்பு அதிகரிப்பு | 8000 |
| முற்பன வட்டி அதிகரிப்பு | 1000 |
| கடன்கொடுநர் அதிகரிப்பு | 3000 |
| பொறி விற்பனை நட்டம் | 3000 |
| சென்மதிவரி அதிகரிப்பு | 4000 |

செயற்பாட்டு நடவடிக்கையிலான தேறிய காசோட்டம் யாது?

1) ரூ 185000 2) 182000 3) 178000 4) 181000 5) 184000

Q29) ராமி கம்பனியின் M என்ற பொருள் தொடர்பான தகவல்கள் வருமாறு

ஆண்டுக்கான கேள்வி 120000 அலகு
கட்டளையிடும் செலவு கட்டளை ஒன்றுக்கு ரூ 18
அலகு கிரயம் ரூ 30
பராமரிப்செலவு அலகு விலையில் 10%
சிக்கனகட்டளைத்தொகை கட்டளைகளின் எண்ணிக்கை முறையே யாது?

1) 16000 அலகுகள், 200 கட்டளை 2) 16000 அலகுகள், 20 கட்டளை
3) 1200 அலகுகள், 10 கட்டளை 4) 8000 அலகுகள், 10 கட்டளை
5) 4000 அலகுகள், 50 கட்டளை

Q30) சாள்ஸ் பொதுக்கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கு 25.5.2019 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டன 31.3.2019 இலிருந்து 25.05.2019 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகள் வருமாறு.

A - இக்காலப்பகுதிக்குள் முதலீட்டின் சந்தை விலை ரூ 25000 ஆல் வீழ்ச்சியடைந்தது.
B - 10.5.2019 இல் விபாரத்திற்கு சொந்தமான ரூ 500000 நிலத்தின் ஒரு பகுதியை அரசு ரூ 300000 விலையில் சுவீகரித்தல்.
C – 31.3.2019 இல் ரூ 200000 கிரயமுடைய சரக்கு 21.5.2019 இல் ரூ 180000 இற்கு விற்கப்பட்டது.
D – 12.05.2019 ஏற்பட்ட தீ விபத்தில் 31.3.2019 இல் உள்ள ரூ 24000 பண்டங்கள் தீயினால் அழிக்கப்பட்டது.

LKAS 10 இன்படி 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்க **தேவையற்ற நிகழ்வுகள்** எவை,

1) ABC மாத்திரம் 2) ABD மாத்திரம் 3) BD மாத்திரம்
2) C மாத்திரம் 5) ABCD எல்லாம்

(………..)

**31-50 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

Q31) பின்வரும் உருப்படிகள் பொருத்தமான நிதிக்கூற்றின் மூலத்திலும் கூறுகளிலும் பட்டியலிடுக.

| **உருப்படிகள்** | **மூலம்** | **கூறுகள்** |
|---|---|---|
| A நிறுத்திவைத்த லாபம் | ……………………….. | …………………………… |
| B உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | ………………………. | ……………………………. |

Q32) ரூ 300000 பட்டியல் விலையில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களுக்கு 20% வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டதுடன் இக்கடனில் 2/3 பகுதி 10% கழிவுடன் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் தோன்றக்கூடிய கணக்கு மீதிகள் என்ன?

கொள்வனவுக் கணக்கு ரூ ………………………………………………...

பெற்ற காசுக் கழிவு ரூ …………………………………………………………….

கடன்கொடுநர் கணக்கின் இறுதிமீதி ரூ ………………………………………………..

செலுத்திய காசு ரூ ……………………………..

Q33) ரூ 200,000 கிரயமானபொருள் ரூ300 000 பட்டியல் விலையில் 20% வியாபாரக் கழிவில் கடனுக்கு விற்கப்பட்டது. இதன்போது ஏற்பட்ட விளம்பரச் செலவு ரூ 6000 கடன்பட்டோரிடமிருந்து 2/3 பகுதி 10% கழிவு தள்ளி காசு பெறப்பட்டது. இதன்போது ஏற்பட்ட பின்வரும் மீதிகள் யாது?

மொத்தச் செலவு ……………… மொத்த வருமானம் ……………… இலாபம் …………………

Q34) பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை, என்பவற்றின் மீது ஏற்படுத்தும் **தேறிய** தாக்கத்தினை அதிகரிப்பு (**I**) குறைவு (D) மாற்றமில்லை (**NC**) என்பவற்றின் மூலம் காட்டுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | சொத்து | பொறுப்பு | உரிமை |
|---|---|---|---|
| A- கடன்பட்டோரிடம் ரூ 1000 கழிவு தள்ளி ரூ 4000 காசு பெறப்பட்டது | …………….. | ………… | ………… |
| B- ரூ 12000 பண்டங்கள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. | ………………. | ………….. | ……………. |
| C- ரூ 10000 பண்டங்கள் ரூ 15000 கடனுக்கு விற்கப்பட்டது. | ………………. | ………….. | …………. |

Q35) 2019 ஜனவரி மாத ஊழியருக்கு செலுத்தப்பட்ட தேறியசம்பளம் ரூ 27000 EPF க்கு ஊழியர் 10% தொழில்கொள்வோன் 15 % பங்களிப்பு செய்கின்றனர் இப்பங்களிப்புக்கள் அடுத்த மாதமே மத்திய வங்கிக்கு அனுப்பப்படுகின்றது. இந்த நடவடிக்கை சொத்து, பொறுப்பு உரிமை என்பவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை பெறுமதியுடன் எடுத்துக்காட்டுக.

……………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………
…………………………………………………………………………………………..

Q36) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியசொத்து ரூ 40000 குறைவடைந்தது நிதியாண்டுக்கான பற்று ரூ 4000 மேலதிக மூலதனம் ரூ 15000 எனின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறிய இலாபம் அல்லது நட்டம் யாது?

……………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………
………………………………………………………………………………………

Q37) அ) நிதிக்கூற்றின் முதற்தர பண்பான உண்மைப்பிரதிநிதித்துவம் எத்தகைய இயல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

ஆ) நிதிக்கூற்றின் முதற்தர பண்பான பொருத்தப்பாட்டு தன்மை எத்தகைய இயல்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

Q38) சாகிரு நிறுனத்தின் 2019 ஜனவரி திருத்திய காசுக்கட்டுப்பாட்டு மீதி ரூ 34000 வங்கிக்கூற்றுப்படி வங்கி மீதி ரூ 38000 ஜனவரி மாத மாற்றப்படாத காசோலை ? வசூழிக்கப்படாத காசோலை ரூ 5000 நேரடிவைப்பு ரூ 10000 வசூழித்த பங்குலாபம் ரூ 6000 வங்கிக்கட்டனம் ரூ 2000

அ) ஜனவரி மாற்றப்படாத காசோலை யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

ஆ) திருத்தமுன் காசுக்கட்டுப்பாட்டு மிதி யாது?

……………………………………………………………………………………………………

Q39) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்புபடும் மிக பொருத்தமான எண்ணக்கரு.

A – நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது கம்பனியின் வாழ்க்கை காலம் 12 மாதங்கலாக பிரிக்கப்படும்.

B- இருப்புக்களின் கிரயத்தைவிட கைத்தேறத்தக்கபெறுமதி குறைவாகவுள்போது குறைந்த பெறுமதியில் இருப்பு மதிப்பிடல்

C – ஏற்படக்கூடிய சாத்தியமான உத்தரவாத கோரிக்கை தொடர்பில் ஏற்பாடு ஒன்று செய்யப்படல்.

D – பொறிக்கு பயனபாட்டு ஆயட்காலத்தை அடிப்படையாகொண்டு தேய்விடப்பட்டது.

| விடயம் | எண்ணன்கரு |
|---|---|
| A | ………………………………… |
| B | ………………………………… |
| C | ………………………………… |
| D | ………………………………… |

➢ பங்குடமையில் ராம் சாம் இலாபநட்டங்களை 3:2 என பகிரும் பங்காளர்கள் பங்குடமையின் எடுகளில் உள்ள மீதிகள் வருமாறு

| | ராம் | சாம் |
|---|---|---|
| 1.4.2018 இல் மூலதனம் | 200000 | 180000 |
| 1.4.2018 இல் நடைமுறைகணக்கு | 25000 | (20000) |
| செலுத்திய மூலதனவட்டி | 8000 | 5600 |
| செலுத்திய சம்பளம் | 6000 | 4000 |
| பற்று | 3000 | 2000 |

பங்காளர்கள் தமது ½ ஆண்டு மூலதனவட்டியை பெற்றிருந்ததுடன் தமது காலாண்டு சம்பளத்தையும் எடுத்திருந்தனர். 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் ரூ 142000

**40ம் 41ம் வினாக்களுக்கு விடை தருக**

Q40) 31.3.2019 இல் பங்குடமையின் தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

Q41) 31.3.2019 இல் பங்குடமையின் உரிமை யாது?

………………………………………………………………………………………….

………………………………………………………………………………………..

Q42) வரையறுத்த சிம்கோ கம்பனியில் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுடன் தொடர்புடைய கடன்கொடுநர் தொடர்பான பிழைதவறுகள் வருமாறு. இவற்றுக்கான சீராக்கத்தை பெறுமதிகளுடன் கட்டுப்பாட்டு கணக்கிலும் பட்டியலிலும் திருத்தம் செய்து காட்டுக.

| பிழை தவறுகள் | கட்டுப்பாட்டுக் கணக்கில் செய்ய வேண்டிய திருத்தம் | பட்டியலில் செய்யவேண்டிய திருத்தம் |
|---|---|---|
| கொள்வனவுத் திரும்பல் ரூ 5000 கொள்வனவு நாளேட்டில் 500 என பதியப்பட்டது | …………………………………… | …………………………………… |
| மதிப்பிழந்த காசோலை ரூ 2000 கடன்கொடுநர் பேரேட்டில் ரூ 200 வரவிடப்பட்டது | ……………………………… | ……………………………….. |

Q43) தோற்பைகளை உற்பத்தி செய்யும் கமலா கம்பனி செலவுகள் நேர் அல்லது நேரில் என வகைப்படுத்துவதுடன் மாறும் அல்லது நிலையானது என வகைப்படுத்தி இவை பொருட்கிரயத்தில் உள்ளடக்கப்படுமா என கூறுக.

| செலவுகள் | நேர்/நேரில் | மாறும்/நிலையானது | உற்பத்திக் கிரயம் (ஆம்/இல்லை) |
|---|---|---|---|
| 1. பதனிடப்பட்ட தோல் | ……………….. | ………………. | ………………….. |
| 2. உற்பத்திக்கூலி | ………………. | ……………….. | ……………… |
| 3. தொழிற்சாலை வாடகை | ………………. | …………………. | ………………. |
| 4. பைகளுக்கான பட்டின் | ……………… | ………………. | ………………. |

Q44) விடுதலை விளையாட்டுக்கழகத்தின் 31.3.2019 இல் முடிவடைந்த நியாண்டுக்கான தகவல்கள் தரப்படுகின்றது. திரண்டநிதி, கட்டிட நிதி, என்பவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினை அதிகரிப்பு (**I**) குறைவு (**D**) மாற்றமின்மை (NC) என்பவற்றின் மூலம் எடுத்துக்காட்டுக.

| தகவல்கள் | திரண்ட நிதி | கட்டிட நிதி |
|---|---|---|
| ஆண்டுக்கான மிகையிலிருந்து ரூ 10000 கட்டிட நிதிக்கு மாற்றல் | ……………….. | …………………… |
| கட்டிட நிதியை பயன்படுத்தி கட்டிடத்தை முழுமையாக கட்டி முடித்தல் | …………………. | ………………….. |

Q45) பின்வரும்கூற்றுக்கள் சரியா பிழையா எனகூறுக.

**A** - 1890 ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டத்தின் 24 ம் பிரிவு படி பங்காளர் மூலதனத்திற்கு வட்டி இல்லை (………..)

**B** – பங்காளரால் ஏடுக்கப்பட்ட சம்பளம் பங்குடைமையின் தேறியசொத்தை குறைக்கும். (………)

**C** - பங்காளர் சேரலின்போது நன்மதிப்பு மூலதனக் கணக்கினுடாக சீராக்கப்படும் நடவடிக்கை பங்குடைமையின் தேறியசொத்தை அதிகரிக்கும். (……….)

**D**- பங்காளர் சேரல் அல்லது விலகலின் போது இலாபநட்டவீதம் மாற்றமடையும் (………..)

❖ 1.4.2018 இல் வரையறுத்த விஜி கம்பனியின் ஏடுகளில் உள்ள மீதிகள்

கூறபட்ட பங்குமூலதனம் ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் ரூ 600000
நிறுத்திவைத்தலாபம் ரூ 220000
பொதுஒதுக்கம் ரூ 90000
18/ 19 இற்கு மதிப்பிட்ட வரி 24000
பொறி மறுமதிப்பீட்டு மிகை ரூ 30000

31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள்.

- 15.6.2018 ஒவ்வொன்றும் ரூ 15 விலையில் 30000 பங்குகள் உரிமை வழங்கல் செய்யப்பட்டது.
- 10.1.2019 இத்திகதியில் உள்ள ஒவ்வொரு 8 பங்குக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் பொதுஒதுக்கம் ரூ 50000 தொகையையும் மிகுதி நிறுதிவைத்தலாபத்தையும் பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது.
- 31.3.2009 இல் ரூ 20000 இடைக்காலப் பங்குலாபமாக செலுத்தப்பட்டதுடன்.
- 31.3.2019 இல் காணி ரூ 150000 ஆல் முதல் தடைவையாக கூட்டி மீள்மதிப்பிட்டதுடன் பொறி இயந்திரம் ரூ 50000 ஆல் குறைத்து மீள்மதிப்பிடப்பட்டது. 31.3.2019 இல் நிறுத்திவைத்தலாபம் ரூ 240000

**46ம், 47ம் 48ம்** வினாக்களுக்கு விடை தருக

**Q46**) 31.3.2019 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கம்பனியின் வரிக்குமுன்லாபம் யாது?

……………………………………………………………………………………………

**Q47)** 31.3.2019 இல் உரிமை மூலதனம் யாது?

……………………………………………………………………………………………

**Q48**) 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்தமுற்றுமடங்கியவருமானம் யாது?

……………………………………………………………………………………………

Q49) அ) நிதிக்கூற்றுக்களின் மூலங்கள் அளவிடப்படும் அடிப்படை முறைகள்

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

ஆ) சிக்கனகட்ளை தொகைமாதிரியின் எடுகோள்கள் 4 தருக.

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

Q50) வரையறுத்த சாம் கம்பனி 1.4.2018 இல் பொறியொன்றை 3 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டது பொறியின் ஆயுட்காலம் 4 வருடம் குத்தகை வட்டிவீதம் 20% மூன்று வருடங்களுக்குமான நிலையான தவனைக்கட்டனம் ரூ 100000 இது வரு இறுதியில் செலுத்தப்படும் வட்டி வீதத்திற்கான கழிவிடல் காரணி வருமாறு.

| ஆண்டு | கழிவிடல் காரணி |
|---|---|
| 1 | 0.8 |
| 2 | 0.6 |
| 3 | 0.5 |

அ) 1.4.2018 இல் சொத்துப்பயன்படுத்தல் உரிமை யாது?

……………………………………………………………………………………………

ஆ) 31.3.2019 இல் நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்படவேண்டிய குத்தகைக்கட்டன கொடுப்பனவு கடப்பாட்டுக் கணக்கு மீதிகள்

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………